கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

*முனைவர் மா.ராஜவேல்,* Ph.D.
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி:* ***94890 56730***

*தொலைபேசி:* ***0422 - 6611302***
*நிகரி:* ***0422 - 2431821***
*மின்னஞ்சல்:*pro@tnau.ac.in

---

*பெறுநர்,* *தேதி:* ***04.11.2025***
*ஆசிரியர்,*
*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாவட்ட அளவிலான வினாடி வினா போட்டி

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சமுதாய நற்பணி மன்றத்தின் 30 ஆம் ஆண்டு விழா மற்றும் மாவட்ட அளவிலான வினாடி வினாப் போட்டி 01.11.2025 அன்று நடைபெற்றது. இதில் துவக்க உரை ஆற்றிய முனைவர். ஜெ. ராமலிங்கம் தனது அறிமுக உரையில் மாணவர்கள் வினாடிவினா நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் தங்களது பொது அறிவையும், நினைவாற்றலையும், விரைவான சிந்தனைத் திறனையும் மேம்படுத்திக் கொள்ளமுடியும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் சேலம் மண்டல துணைப் பொது மேலாளர் பொ.மு.செந்தில்குமார் அறிவைப் பகிர்ந்து வளர்க்கும் அரிய வாய்ப்பாக வினாடி வினாப் போட்டிகள் நடைபெறுகின்றன என்றும், அனைவரும் இத்தகைய நிகழ்வுகளில் பங்கேற்று தங்களது அறிவுத்திறனை வெளிப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) மற்றும் பதிவாளர் முனைவர். இரா. தமிழ்வேந்தன் தனது தலைமையுரையில் வினாடி வினாவில் பங்கேற்பது வெறும் போட்டி அல்ல இது ஒரு கற்றல் அனுபவம். இதன் மூலம் தன்னம்பிக்கை, பேச்சுத்திறன், மன உறுதி போன்றவை வளர்கின்றன என்று கூறி போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். சமுதாய நற்பணி மன்றத்தின் மாணவர் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர். மா. ராஜு மற்றும் முனைவர் ரா. மகேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சமுதாய நற்பணி மன்றத்தின் இணைச்செயலாளர் செல்வன். ஞா. விகாஷ் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**